# வீரமா முனிவரின் கற்பனை நயம்

*க. கிருஷ்ணகுமாரி*
*தலைவர். தமிழ்த்துறை, அனுகிரஹா கல்லூரி*
*திண்டுக்கல்*

தமிழின் வளர்ச்சியில் பெரும்பங்கு சமயங்கள் வகித்தன என்றால் மிகையாகா. எல்லாச் சமயங்களும் தத்தம் கருத்தை விளக்கத் தமிழைக் கருவியாகக் கொண்டு செயல்பட்டன. இவ்விலக்கியங்களுக்கு உணர்ச்சியளிப்பதும் பொலிவூட்டுவதும் கற்பனை. கற்பனை அணிகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது. சிறந்த கற்பனை நயம் கொண்ட படைப்பாளர்களில் ஒருவரான வீரமாமுனிவரின் கற்பனைநயம் பற்றி இக்கட்டுரையில் ஆய்வோம்.

வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி. பெற்றோர் கொண்டல் போபெஸ்கி, எலிசபெத். பிறப்பு இத்தாலி. இவர் இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, இசுபானியம், சமஸ்கிருதம் போன்ற பல மொழிகள் அறிந்தவர். இவர் தனது 30 வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று கற்பனை நயம்பட காலத்தால் அழியாத காப்பியங்கள் படைத்துள்ளார். 18ஆம் நூற்றாண்டில் மொழி தெரியாத நாட்டில் வந்து மொழிகற்று காப்பியம், சிற்றிலக்கியம், கதை, இலக்கணம் போன்ற பல படைப்புகளை உருவாக்கியுள்ளார்.

வீரமா முனிவர் தமிழகத்தில் 36 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். இக்காலக்கட்டத்தில் கடிதம், காப்பியம், உரைநடை, இலக்கியம், இலக்கணம், சிறுகதை, செய்யுள், அகராதி, மொழிபெயர்ப்பு, பஞ்சாங்கம், தொகுப்பு நூல், மருத்துவ நூல், விளக்க உரைகள் என்று தமிழுக்குப் பன்முகத் தொண்டுகள் பல புரிந்துள்ளார்.

### வீரமாமுனிவரின் உரைநடை நூல்கள்

வேத விளக்கம், பேதக மறுத்தல், லுத்தேரினத்தியல்பு, ஞானம் உணர்த்துதல், வேதியர் ஒழுக்கம், வேதியர் ஒழுக்கச் சோதனை, ஞான சூத்திரங்கள், வாமன் சரித்திரம் முதலிய எட்டு நூல்களும் வீரமாமுனிவரின் உரைநடை இலக்கியத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

### வீரமா முனிவரின் தேம்பாவணி

வித்தகப் புலவர் வீரமாமுனிவரின் எழுத்தோவியங்களுள் சிறப்பு வாய்ந்தது தேம்பாவணிக் காப்பியம். இதுவரை 8 பதிப்புகளைப் பெற்றுத் தமிழில் அச்சேறிய முதல் கிறித்துவப் பெருங்காப்பியமாகத் திகழ்கிறது. இந்நூல் 36 படலங்களுடன் 3615 பாடல்களைக் கொண்டுள்ளது. தேம்பாவணியில் 105 மறைக்கதைகளும், 5 வழக்காற்றுக் கதைகளும், ஒரு தகவல் கதைகளும், கிளைக்கதைகளாக இடம் பெற்றுள்ளன.

### வீரமாமுனிவரின் சிற்றிலக்கியங்கள்

கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, அடைக்கலநாயகி, மேல்வெண்கலிப்பா, வண்ணம் கருணாம்பரப் பதிகம் அல்லது தேவாரம் முதலிய ஏழும் வீரமாமுனிவரின் சிற்றிலக்கிய வெளிப்பாட்டுக்குச் சான்றாகத் திகழ்கின்றன.

### வீரமாமுனிவரின் அகராதி நூல்கள்

சதுரகராதி, தமிழ் இலத்தீன் வழக்குச் சொல் அகராதி போர்த்துக்கீசிய இலத்தின் தமிழ் அகராதி, தமிழ்–பிரெஞ்சு அகராதி, தமிழ்–ஆங்கில அகராதி என ஐந்து அகராதிகளை வீரமாமுனிவர் தொகுத்ததாகப் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

### வீரமாமுனிவர் இலக்கண நூல்கள்

தமிழில் தொன்னூல் விளக்கம், இலத்தீனில் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகிய இலக்கண நூல்களை இயற்றியுள்ளார். தொன்னூல் விளக்கம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் விளக்குகிறது. கி. பி. 1731ம் ஆண்டு எழுதப்பட்ட இந்நூல் 1838ல் வேதகிரி முதலியரால் பதிப்பிக்கப்பட்டது.

மங்கைக்கு அழகு ஊட்டுவது அணிகலன். அதுபோல செய்யுள் என்னும் மங்கைக்கு அழகு தருவது அணி. இது கற்பனையில் வெளிப்பாடு இவ்வணி செய்யுளுக்குச் சொல்லாலும் பொருளாலும் அழகூட்டுகின்றன.

வீரமாமுனிவரின் தேம்பாவணி இயேசுவின் வளர்ப்புத்தந்தையாகிய வளனாரைத் (Niria) தலைவராகக் கொண்ட காப்பியம் சூசையின் வாழ்வை அது காப்பிய முறையில் சித்தரிக்கின்றது.

அதில் இயேசுவின் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இவற்றில் விவிலியம் கூறும் நிகழ்ச்சிகள் உண்டு. விவிலியம் கூறாத நிகழ்ச்சிகளும் செய்திகளும் உண்டு. அவற்றில் ஒன்று இயேசு ஏழு வயது பையனாகும் வரை நடந்த நிகழ்ச்சிகளில் அவரிடம் பூத்த புன்முறுவல் ஆகும். இது விவிலியம் கூறாத செய்தி. இது உண்மையாக இருக்கலாமா எனச் சிந்திக்கும் அளவிற்கு அவர்தரும் கற்பனை நயம் உள்ளது.

**பிறக்கும் முன்**

இயேசுவின் தாய் மரியா, கண்ணியாய் இருக்கும்பொழுதே, தாயாகப் போகும் செய்தி வானதூதரால் கூறப்பட்டது. அதற்கு மரியா இசைவு தெரிவித்தவுடன், அவருடைய உறவினரான எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றார். இவர் முதிர்ந்த வயதில் தாயாகப் போகிறார். அது அவருக்கு ஆறாம் மாதம்.

எலிசபெத்தைச் சந்தித்த மரியா வாழ்த்துக் கூறியதும், அவர் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று (லூக் 1:41) எலிசபெத்தும் இதே செய்தியைச் சொல்கிறார். குழந்தையின் உள்ளத்தில் இருந்த மாசு மறைந்தது. மகிழ்ச்சி மலர்ந்தது. இதைக் கண்ட இயேசு புன்னகை பூத்தார். குழந்தை (யோவான்) மகிழ்ந்தார். (தே.ம் 26:13) அன்புள்ளங்கள் சந்திக்கும் பொழுது தான் நோக்கி மெல்ல நகரும் (குறள் 1094) என்பது இயல்பு தானே.

**பிறந்தவுடன்**

இறைவனாகிய இயேசு மக்களுக்கு நன்மைசெய்ய வருகிறார். அவர் பிறந்த நிகழ்ச்சியை நினைத்தாய் மகனே நீ விரும்பி தேர்ந்த துன்பத்தை இந்த உலகம் உனக்கு கொடுக்கும். நீ அதற்கு விண்ணக நலம் தருவாய் (10:118) இந்த உரையைக் குழந்தை இயேசு சுவைத்தார் இங்ஙனம்.

**"சொன்ன உரை, தேன் சுவையின் சுவை**

**யன்ன உன்குழவி நகையாடினான்" (10:19)**

இது இலத்தீன் மொழிப்புலவர் வர்ஜில் எழுதிய கவிதையில் வரும் கருத்து

**"உன் தாயைச் சிரிப்பால் கண்டு கொள்ளத்**

**தொடங்கு சிறு பையனே"** (Bowra Virgil to Milton P.107)

பிறந்த 40ஆம் நாளில் குழந்தையைக் கோவிலில் காணிக்கை ஆக்குவது கடமை. அதைத் திருக்குடும்பத்தினர் நிறைவேற்றும் போது சிமியோன் என்ற இறைவாக்கினர் குழந்தைக்கு நிகழவிருப்பதை முன்னுரைத்தார்.

**"இதை இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள்**
**பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்.**
**முகமலர்ந்த் அடையாளமாகவும் இருக்கும்" (லூக் 234)**

இதைக் கேட்ட பெற்றோர் **"பீடை நீள்புளரி" தாழ்ந்தார்.** (தே.ம் 12.94) ஆனால் குழந்தை இயேசு முகமலர்ந்து தலையசைத்து இசைவு தெரிவித்தார்.

**"கான நில முகை விண்டென்ன**
**கணிந்த புன் முறுவல் கொட்டி**
**மீனில் அம்சென்னி சாய்தீது**
**விழைந்து அதற்கு அமைந்தான் மன்னோ" (12.95)**

"இங்கு இடுக்கண் வடுங்கால் நகுக" என்ற குறள் (621) நினைவுக்கு வருகிறது.

**மேலும்,**

**நகல் வல்லவர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**

**பகும்பாற் ட்டதன்றருள்**

என்ற குறள் நாம் நகைக்க வேண்டும் என்று கூறுகிறது. துன்பமே இன்பம் என்று உணர்வது அதற்கு உதவும் வழி எனலாம்.